# இயற்கையான ஷாப்பிங் அனுபவத்தை வழங்கும் வகையில் வாய்ஸ் அசிஸ்டெண்ட் வசதியை பிளிப்கார்ட் அறிமுகம் செய்துள்ளது

*இந்தி மற்றும் ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புதிய வாய்ஸ் அசிஸ்டெண்ட் ஃபிளிப்கார்ட்டின் மளிகை ஸ்டோர், சூப்பர்மார்ட்டில் கிடைக்கப்பெறும்*

**பெங்களூரு - ஜூன் 9, 2020:** இந்தியாவின் உள்ளூர் மின்-வர்த்தகச் சந்தையிடமான ஃபிளிப்கார்ட், நுகர்வோரின் மின்-வர்த்தகப் பயணத்தை எளிமையாகவும், இயற்கையாகவும் மாற்றுவதற்காக, வாய்ஸ் அசிஸ்டெண்ட் திறனை அதன் அடித்தளத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. பிளிப்கார்ட்டின் மளிகைக் கடையான சூப்பர்மார்ட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாய்ஸ் அசிஸ்டெண்ட், இந்தி மற்றும் ஆங்கிலத்தில் தொடங்கி பல மொழிகளில் குரல் கட்டளைகளைப் பயன்படுத்தி தயாரிப்புகளை எளிதாகக் கண்டுபிடித்து வாங்க நுகர்வோருக்கு உதவும்.

**வாய்ஸ் அசிஸ்டெண்டிற்குப் பின்னால் உள்ள தொழில்நுட்பம்**

வாய்ஸ்-ஃபர்ஸ்ட் உரையாடல் சார்ந்த AI இயங்குதளம், பிளிப்கார்ட்டின் உள்ளகத் தொழில்நுட்பக் குழுவால் பேச்சு அடையாளம், இயற்கை மொழி புரிதல், இயந்திர மொழிபெயர்ப்பு மற்றும் இந்திய மொழிகளுக்கான எழுத்துகளை பேச்சாக மாற்றுதல் ஆகியவற்றுக்கான் தீர்வுகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தீர்வுகள் இந்தி போன்ற மொழிகளை, மின்-வர்த்தகப் பிரிவுகள் மற்றும் தயாரிப்புகள் மற்றும் ஒரு பொருளைத் தேடுவது, தயாரிப்பு விவரங்களைப் புரிந்துகொள்வது, ஒரு ஆர்டரை வைப்பது போன்ற பணிகளை புரிந்து கொள்ளும் திறன் கொண்டவையாகும். பயனரால் பேசப்படுகிற மொழியை தானாகக் கண்டறியும் வகையில் உள்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்த AI தளம், நிகழ்நேரத்தில் பல்வேறு இந்திய மொழிகளில் ஷாப்பிங் தொடர்பான உரையாடல்களில் பயனரின் நோக்கத்தை, பல்வேறு இந்திய மொழிகளில் டிரான்ஸ்கிரைப், டிரான்ஸ்லேட், டிரான்ஸ்லிட்ரேட் செய்யும் மற்றும் புரிந்துகொள்ளும்.

நுண்ணறிவு மற்றும் வாய்ப்புகளை சேகரித்து, மளிகைக்கான வாய்ஸ் அசிஸ்டெண்ட் திறனை உருவாக்கிடும் வகையில், பல்வேறு டவுன்கள் மற்றும் நகரங்களில் ஐந்து மாதங்களுக்கும் மேலாக பிளிப்கார்ட் ஒரு விரிவான இனவியல் ஆய்வை மேற்கொண்டது. இது, சேவைகளை எளிதில் அணுக விரும்பும் பயனர்கள், பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்ள விரும்புவதை கண்டறிந்தது. எனவே, பிளிப்கார்ட் அதன் வாய்ஸ் அசிஸ்டெண்ட் வசதி, பயனரின் மளிகை ஷாப்பிங்கை மிகவும் தனிப்பட்டதாகவும் மற்றும் இயற்கையாக அனுபவமாகவும் மேம்படுத்தும் என்று நம்புகிறது.

பிளிப்கார்ட்டின் குரல் அசிஸ்டென்ட் நுகர்வோருக்கு நிஜ உலகில் ஒரு கடைக்காரருடன் பேசுவதைப் போலவே பேசுவதன் மூலம் அவர்களது மளிகைக் பொருட்கள் தொகுப்பை உருவாக்க உதவுமஆங்கிலம் மற்றும் இந்தி இரண்டிலும் உள்ள கட்டளைகளின் மாறுபாடுகளைப் புரிந்து கொள்ளும் அதே வேளையில், . கலப்பு மொழி கட்டளைகளுக்கு பதிலளிக்கும் திறனும் இதற்கு உள்ளது.

மளிகை சாமான்களை வாங்கும் நுகர்வோர் குறிப்பிட்ட தயாரிப்புகளைப் பற்றிய தகவல்களுடன், தெளிவான நோக்கத்தைக் கொண்டிருப்பதால், பிளிப்கார்ட்டின் குரல் அசிஸ்டெண்ட் பயனர்கள் தங்கள் மளிகைக் கூடைகளை பல தயாரிப்புகளுடன் விரைவாகவும் திறமையாகவும் நிரப்ப உதவும் மற்றும் அவர்களின் பயணத்தை தடையற்றதாகவும், இயற்கையாகவும் மாற்ற உதவும்.

**பிளிப்கார்ட்டின் தலைமை தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் ஜெயந்திரன் வேணுகோபால்** அவர்கள், *"ஒரு உள்நாட்டு மின்-வர்த்தக நிறுவனமாக, இந்தியாவின்-முதல் கண்டுபிடிப்புகளை உருவாக்குவதில் பிளிப்கார்ட் முன்னணியில் உள்ளது மற்றும் வீடியோ, வெர்னாகுலர் மற்றும் குரல் ஆகியவைகள், இந்தியாவில் மின் வணிகத்தின் அமலாக்கத்திற்கான முக்கிய தீர்வுகளாகத் திகழ்கின்றன. எங்கள் வீடியோ மற்றும் வெர்னாகுலர் வழங்குதல்களுக்கு நாங்கள் சிறப்பன அமலாக்கத்தைக் கண்டுவரும் நிலையில், அந்த திசையில் அடுத்த கட்டமாக மின்வணிகத்திற்கான குரல் திறன்குள்குத் தீர்வு காண்பதை மேற்கொண்டுள்ளோம்"* என்று கூறினார்

மேலும் அவர், “பிளிப்கார்ட்டில் உள்ள தொழில்நுட்பக் குழு நாடு முழுவதும் பயணம் செய்து மளிகைக்கான ஒரு வாய்ஸ் அசிஸ்டெண்ட்டை கட்டமைப்பதற்கான, பல்வேறு வரையறைகளை புரிந்துகொண்டுள்ளது மற்றும் இந்திய மொழிகளில் உள்ள மாறுபட்டதன்மைகளைக் கண்டறிந்து பதிலளிக்கும் வகையில் அதை வடிவமைத்துள்ளது. இந்த திறனை அறிமுகப்படுத்துவது குரல் அடிப்படையிலான ஆன்லைன் வர்த்தகத்தை நோக்கி நுகர்வோரின் வளர்ந்து வரும் அமலாக்கம் மற்றும் ஆதரவிற்கும் நன்கு பொருந்துகிறது” என்றும் கூறினார்.

**பிளிப்கார்ட்டின் மளிகை மற்றும் பொது வணிகம் மற்றும் ஃபர்னிச்சர்கள் பிரிவின், SVP, மனீஷ் குமார்** அவர்கள், *“குரல்-அடிப்படையிலான ஷாப்பிங் இயற்கையானது மற்றும் எங்கள் பயனர்களுக்கு, இயன்ற அளவு இயற்கையாக, ஒரு உண்மையான உரையாடல் அனுபவத்தை வழங்க நாங்கள் விரும்பினோம். எங்கள் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மற்றும் AI ஏதுவாக்கப்பட்ட, இந்த மளிகைக்காக முதலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வாய்ஸ் அசிஸ்டெண்ட் வசதி, நுகர்வோருக்கு எளிதான பொருட்கள் சேர்ப்பு அனுபவத்திற்கு உதவுவதன் மூலம் ஷாப்பிங்கை மிகவும் எளிதாக்குகிறது. மளிகை என்பது இந்திய மின் வணிகத்தில் மிகவும் குறைவாக ஊடுருவப்பட்ட வகைகளில் ஒன்றாகும் மற்றும் வாடிக்கையாளர்கள் வளர்ச்சி மற்றும் ஏற்ப்பிற்கான ஒரு பெரிய ஆற்றலை அது கொண்டுள்ளது. எங்கள் மளிகை வணிகம் கடந்த ஆண்டை விட தனித்துவமாக வளர்ந்துள்ளது, வாய்ஸ் திறனை அறிமுகப்படுத்த சரியான தருணமாக இதை மாற்றியுள்ளது.*

அண்ட்ராய்டு சாதனங்களில் பிளிப்கார்ட்டின் மொபைல் பயன்பாட்டைப் பயன்படுத்தும் அனைத்து ஆங்கில மற்றும் இந்தி பயனர்களுக்கும் மளிகைக்கான வாய்ஸ் அசிஸ்டெண்ட் தற்போது கிடைக்கிறது. மேலும் இது படிப்படியாக iOS மற்றும் வலைத்தளங்களிலும் கிடைக்கப்பெறும். மளிகைக்கான வாய்ஸ் அசிஸ்டெண்ட் அறிமுகம், வாடிக்கையாளர்களை-மையமாகக் கொண்ட தீர்வுகளை வளர்ப்பதில் பெயர் பெற்ற ஃபிளிப்கார்ட்டின் பத்தாண்டுகால அனுபவத் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

**ஃபிளிப்கார்ட் குழுமம் குறித்து:**

இந்தியாவின் முன்னணி டிஜிட்டல் வர்த்தகக் குழுமமாகத் திகழும் ஃபிளிப்கார்ட் குழுமம், ஃபிளிப்கார்ட், மிந்த்ரா, ஜபாங் மற்றும் ஃபோன்பே ஆகிய குழும நிறுவனங்களை உள்ளடக்கியதாகும். 2007 – ம் ஆண்டு, பல மில்லியன் நுகர்வோர்கள், விற்பனையாளர்கள், வணிகர்கள் மற்றும் சிறு வர்த்தகத்தினர் இந்தியாவின் மின்-வர்த்தகப் புரட்சியின் ஒரு பகுதியாகத் திகழ்வதை ஏதுவாக்கியுள்ளது. 200 மில்லியனுக்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட வாடிக்கையாளர் அடித்தளத்துடன், 150 மில்லியனுக்கும் மேற்பட்ட தயாரிப்புகளை 80 – க்கும் மேற்பட்ட வகையினங்களில் ஃபிளிப்கார்ட் வழங்கி வருகிறது. இந்தியாவில், மின்-வர்த்தகத்தை ஜனநாயகப்படுத்தும் எங்களது முயற்சிகள், அணுகுத்தன்மை மற்றும் கட்டுப்படியாகக் கூடிய தன்மையை மேம்படுத்துகிறது, வாடிக்கையாளர்களை மகிழ்விக்கிறது மற்றும் சூழலமைப்பில் பல லட்சம் பணிகளை உருவாக்குகிறது மற்றும் பல துலைமுறை தொழில்முனைவோர்களுக்கு திறனளிக்கிறது மற்றும் MSME-க்கள், புத்தாக்கத்தை முன்னின்று நடத்தி, பல தொழில்துறை முதல் அம்சங்களை சாத்தியமாக்குவதை ஏதுவாக்கிவருகிறது. கேஷ் ஆன் டெலிவரி, நோ காஸ்ட் EMI மற்றும் ஈசி ரிட்டர்ன்ஸ் போன்ற பல்வேறு வாடிக்கையாளரை-மையமாகக் கொண்ட புத்தாக்கங்களின் வழியாக ஆன்லைன் ஷாப்பிங்கை அதிகம் அணுகத்தக்கதாகவும் மற்றம் கட்டுப்படியாகக்கூடியதாகவும் பல மில்லியன் இந்தியர்களுக்கு இந்நிறுவனம் மாற்றுகிறது. ஆன்லைன் ஃபேஷன் சந்தையில் மிந்தரா மற்றும் ஜபாங், இந்தியாவின் வேகமாக வளர்ந்து வரும் டிஜிட்டல் பேமெண்ட்கள் அடித்தளம் ஃபோன்பே ஆகியவற்றின் வழியாக, இந்திய வர்த்தகத்தின் மாற்றத்தினை தொழில்நுட்பத்தின் வழியாக வழிநடத்திவருகிறது.

**மேலதிக விபரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் :** media@flipkart.com